## இராமலிங்க சித்தரின் சித்தி நிலைப் படமும்
## ரிஷிகள் - யோகிகள் - சித்தர்கள் தம் காந்தச் சக்திகளும்

* * *

T.R. துளசிராம்
ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமம், புதுச்சேரி.

இராமலிங்க வள்ளல் பெருமான் தம் இறுதிக்காலங்களில் விபூதி போன்ற சமயச் சின்னம் ஏதும் அணியாமல் மேட்டுக்குப்பத்தில் வாழ்ந்தபோது அருட்ஜோதி அவரது உடலிலும் நிரம்பி சுற்றுப்புறச் சூழலிலும் ஊடுருவிப் பரவி இறைமயமான இறவா உடலுடன் மரணமிலாப் பெருவாழ்வடைந்து உலக மக்களின் உடல்களிலெல்லாம் புகுவதற்கான சித்தி நிலையில் விளங்கியவாறு அமர்ந்திருக்கும் நிலையை - நினைந்து வரைந்த ஓவியத்தின் போட்டோப் பிரதிப் படமாகும்.

பெருமானின் கண்கள் கருணையுடன் மேலான அருட்சக்தியைப் பொழிந்த வண்ணமா- யுள்ளன. நம் இருகைவிரல் நுனிகளால் அவரது உடலையும், பின்பு அவரது சுற்றுப்புறச் சூழலையும் தனித்தனியாக 3 நிமிடம் தொட்டுணர்ந்தால், அத்திருமேனி அருட்பெருஞ்ஜோதி சக்தியையும் (அதாவது சித்தி வளாகத்திலுள்ள அல்லது அப்படத்திலுள்ள அதே உயரிய சக்தியை) உணர்த்தி, அவரது புறச்சூழல் இன்னும் மேலான சச்சிதானந்த சக்தியையும் வெளிப்படையாகவே உணர்த்தும். குறிப்பாக அவரது உள்ளங்கை, பாதம், இதயநடு இவையும் சச்சிதானந்த சக்தியைப் புலப்படுத்தும். கண்களைப் பார்த்தால் இவ்விரு நிலைச் சக்திகளையும் இணைத்த பேராண்டவரின் அருட்பெருஞ்சக்தியாக உணரலாம்.

ஆகவே, அவரது உடல், அதன் சூழல், அவரது கண்கள் படிப்படியாக நம் தியான உணர்வை ஆற்றலைப் பெருக்கி உள்முகமாக மேலும் மேலும் வலிமையுடன் ஆழ்ந்து செலுத்தும். ஆனால், விபூதி அணிந்துகொண்ட வள்ளலாரின் படமோ, ஞானசபை, சாலை பின்னணியாகக் கொண்ட படமோ இவ்வளவு சிறப்பாக பூரண சக்தியுடன் அமையவில்லை. மற்ற மகான்களின் படமும் இத்துணைச் சிறப்போடு உடலளவிலும் விளங்கும் பூரணசக்தியுடன் அமையவில்லை. பெருமானின் பூரண உருவத்தை மார்பளவு சுருக்கிப் படமாக ஆக்கினால் அதன் சக்தி குறைந்து விடும். விபூதி பூசிய அவர் படத்திலும் சக்தி குறைந்துவிடுகிறது.

இப்படத்தின்மீது ஒரு சாத்துக்குடி ஆரஞ்சுப் பழத்தை வைத்து இரு கைகளாலும் தொட்டு எடுத்தால் அதன் தோல் (வெளிப்பாகம்) பெருமானது உடல் சக்தியையும், உட்சுளைப்பழம் மேலான சச்சிதானந்த சக்தியையும், விதைகள் சமநிலைப்படுத்தும் பரம்பொருளின் சக்தியையும் (State of Equality or **Equalising Power** ) உணர்த்தும். விதைகளைத் தொட்டபின், தோலையோ சுளையையோ தொட்டால் அவை வித்தியாசமின்றி ஒரே சமமான சக்தியையே உணர்த்தும். செடி முளைப்பதற்கு இப் படத்தின் மீது வைத்து எடுத்த நீர் பாத்திரத்தின் தண்ணீரை ஊற்ற வேண்டும்.

இம்மூன்று உயர்சக்திகளை வெளிப்படுத்தும் ஆற்றல் வேறு யாருக்கும் அமையவில்லை. இம்மூன்றும் பெருமானிடமும் அவரது படத்திலும் இருப்பதாய் அறியவேண்டும்.

ஆகவே, அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை நினைந்து இப்படத்தைச் சிறிது நேரம் தொட்டும் பார்த்தும், அல்லது தொட்டபடியே பெருமானின் கண்களைப் பார்த்தும் வந்தால், மன அமைதியும் இதய நெகிழ்வும் ஏற்படும். ஆகவே வழிபாடு, ஜபம், தியானம் செய்வதற்கும் அருளைப் பெறுவதற்கும் இது ஒரு இன்றியமையாத சாதனமாகும். மாதா மாதம் வரும் பூச நாளன்று ஜோதி ஆண்டவர் நம்மைத் தேடிவந்து சிறப்பாக அருளுகிறார். அன்று தியானம் தவறாதீர்.

ஆண்டவர் தம் திருமேனியால் தொட்டு அணைத்ததால் வள்ளலாரின் உடலும் தெய்வீக மயமாக மாறியது. ஆகவே அவரது உடல் சக்தியை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உணவு, பானம் முதலியன ஆண்டவரை நினைந்து அல்லது பூஜை செய்து அர்ப்பணமாகச் சாப்பிட்டால் மாத்திரம் போதாது. அவையும் ஆண்டவரின் அல்லது வள்ளலாரின் நேர்சக்தியைக் கிரகித்துக் கொள்ளும்படி பின்வருமாறு செய்து நினைந்து சாப்பிடவேண்டும்.

இப்படத்தின் மீது தொடும்படி வைத்த எந்தப் புனிதப்பொருள், மற்றெந்தப் பொருளும் - காந்தக் கல்லும் இரும்பொருளுங்கூட - உடனே பெருமானின் உடல் சக்தியை கிரகித்துத் தேக்கிக் கொள்ளும். உணவுப் பொருள்கள் பிரசாதப் பொருள்களாயின் அவரது குழவியின் சச்சிதானந்த சக்தியைப் பெற்று வைத்துக் கொள்ளும். ஆகவே எச்சில் படாமலிருக்க பிளாஸ்டிக் உறையிட்ட இப்படத்தின் மீது, அல்லது படத்தைச் சுற்றத் தொடும்படி, உணவுத் தட்டு வைத்து உணவு பரிமாறியபின் படத்தையும், தட்டையும் (அல்லது) உணவையும் ஒருசேர இருகைகளால் தொட்டு வைத்துச் சாப்பிட்டால் உணவும் பானமும் இச்சக்தியைப் பெறுகின்றன. இதை நம் அஞ்ஞான உடலும் நாளுக்கும் கிரகித்துக்கொள்ளுவதால் உடலின் சக்தி நாளடைவில் - 20 அல்லது 30 தினங்களில் - வள்ளலாரின் உடல் சக்திக்கோ அல்லது சச்சிதானந்த சக்திக்கோ ஒப்ப அமைந்து விடுகிறது. முலைப்பால் அருந்தும் குழந்தையின் நிலையில் உள்ள நாம், இவ்வாறு உண்ணுவதால் என்னாகிடுமோ என்று அச்சப்படாமல் உண்ணவேண்டும்.

இதனால் உடலும் நாளுக்கும் தெய்வீகத்தரமாக முழுமையாக மாறவில்லை என்றாலும், ஞான இறைசக்தியை (Spiritual - Physicalpower) உடலும் தன் அஞ்ஞானத் தன்மைக்கு ஏற்ப கிரகித்து வாங்கிக் கொள்கிறது. உடலின் நாளுக்கள் சக்தியலில் ஒருமாற்றம் அல்லது திருப்பம் அடைகிறது. இம்மாற்றத்தை உணருவதும், நம்முடலின் நாடியின் சக்தியாலும். நம்முடலையும், படத்தில் பெருமானின் உடலையும், மாறி மாறிச் சிறிது நேரம் ஒன்று ஒன்று நம் கையால் தொட்டுப் பார்த்து உணரலாம். இரண்டும் சமமாக ஒரேவகை சக்தியை உணர்த்தினால் நம்முடல் பெருமானின் உடல் சக்திக்கு ஒத்துள்ளது என அறியவேண்டும். நம்முடல் அதிக சக்தியை உணர்த்தினால் அது பெருமானின் சச்சிதானந்த சக்திக்கு ஒத்துள்ளதென அறியலாம். எப்படியும் விபூதி பூசிய அவரது படத்தை விட நம்முடல் அதிக சக்தியை உணர்த்தும். இவ்வாறு அறிந்து கொள்ள முடியாவிடினும், பொதுவாகச் சொல்லப்போனால், நம் தியான ஆற்றல் மிகுதிப்பட்டு தீவிரமும், நன்மையும், மென்மையும் பெற்று உள்முகமாக ஆழ்ந்து செல்லும் தன்மையைப் பெற்றுவிடும். மேலும், அருட்பெருஞ்ஜோதி மகாமந்திரத்துடன் " ஆ - ஊ - ஈ - ஏ - ஐ - அருட்பெருஞ்ஜோதி" என்று சேர்த்து ஓதி வந்தால் உடலும் மனமும் உள்ளமும் ஒருங்கே ஞானமயுற்ற ஆன்ம அருட்ஜோதியைப் பெறலாம். அருள்நிலையில் வாழலாம். ஆண்டவர் உடலில் மூலாதாரத்திலும் வந்து குடி கொள்ளுவார். அப்போது உடலும் அருள்ஜோதியமாகிவிடும்.

மேலே சொல்லியபடி ஒரு மாதம் வாயிபடத்தின் மீது உணவு சாப்பிட்ட பின், நமக்கு வரும் நோயைத் தானே நீக்கவும், தடுக்கவும் உதவும் புதுமுறை மருத்துவத்தை ஆய்வோம். வள்ளலார் தம் "சத்திய ஞான பெரு விண்ணப்பத்தில்" கூறுகிறார். மனித உடலில் 25 நிறங்கள் இருப்பதாகவும் இன்னவை என்றும் விவரித்துள்ளார். கருமை என்பது கரு நீலம் ( Deep Blue ) "செம்மையில் கருமை" - நிறங்களை சேர்த்துப் பார்த்தால் லைட் தெரியும். 25 கலர்களுடன் பிங்க், லைட் பிரௌன், மஞ்சள், லைட் மாவ், வயலெட் கலர் என்று 30 ஆக சேர்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நிறத்திற்கும் ஒரு தனிச் சக்தியுண்டு.

ஒரு நிறத்தின் சக்தி குறையின் நோய் வர ஏதுவாகும். அக்குறை சக்தியை நிறைவாக சரிப்படுத்தி விட்டால் நோய் வராது. வந்த நோயும் குணமாகும். இதற்குக் கலர் ரிப்பன்கள் தேவை. சார்ட் படத்தின் மீது "குறைகலர் ரிப்பனை" (நாடாவை) வைத்து அதன்மேல் உணவுத்தட்டு வைத்து நாடாவைத் தொட்டபடியே உணவு, பானம், பழம், பால் போன்றவை உண்டால், அவை மருந்தாகி குறைகளை சரிப்படுத்தி விடும். பல குறைகளிருப்பின் ஒருவேளை உணவுக்கு ஒரு குறை கலர் ரிப்பன் என முறை வைத்துச் சாப்பிட்டு வந்தால் சரியாகிவிடும். எல்லாவித வைத்திய முறைகளுக்கும் கலர் மருத்துவம் பொதுவான அடிப்படையாகும்.

இனி உடலில் உள்ள குறைகளைக் கண்டுபிடிக்கும் வழி. சார்ட் படத்தைச் சுற்றிலும், 30 கலர் ரிப்பன் துண்டுகளை வெட்டி, நூலால் அல்லது ஒட்டியால் அழுந்த வைத்துக் கொள்க. சார்ட் ?'படத்தின்மீது ஒரு கை வைத்துக் கொண்டு, ஒவ்வொரு கலரை அரை அல்லது ஒரு நிமிடம் விரலால் தொடவும். ஒரு கலரைத் தொட்டு பின்பு விரல் எடுத்ததும் கவனிக்கவும். தலையில் ஒரு சக்தி ( Force ) உணர்ந்தால், அந்தக் கலர் உடலில் சரியாக உள்ளது என்றும், ஒரு சக்தியும் உணரவில்லை எனில் அது "குறைகலர்" என்றும் தெரிந்து கொள்க. வேண்டுமானால், கலர் சிகிச்சையுடன் மற்ற மருந்தும் கொள்ளலாம். ஒத்துக்கொள்ள ஆதாரமாகும், சார்ட்டின் "கலர் ரிப்பன் படத்தின்" மீது (அல்லது பக்கத்தே) அம்மருந்தை வைத்துத் தொட்டு பின்பு கை எடுத்தபோது தலையில் ஒரு சக்தி உணர்ந்தால் அது சரியான, குணப்படுத்தும் மருந்து எனக் கொள்ளவும். (அல்லது அதை குறை கலர் ரிப்பன்களோடு சேர்த்துத் தொட்டும் அவ்வாறே அறியலாம்.) இதுபோல், நோயிருக்கும் வரை உணவு வகைகளில் – பருப்பு வகைகள், தானியங்கள், காய்கறிகள், பழங்கள், பால், தயிர், சர்க்கரை – எது எது கொள்ளத் தக்கது – எது விலக்கத் தக்கது என்றும் அறியலாம். இனி சார்ட்டின் சிறப்பான இறையாற்றலை விளக்குவோம்.

நம் நாட்டிலும், ஏன் உலகம் பூராவும் உள்ள பலப்பல கோவில்கள், தேவாலயங்கள், மாதாகோவில்கள், மசூதிகள், தெய்வங்கள், தீர்த்தங்கள், தீர்த்தங்கள் – இவற்றின் படங்களையோ அல்லது புனிதப் பிரசாதப் பொருட்களையோ தொட்டும், அவ்வாறே அவதார மகான்கள் – யோகியர், சித்தர், பக்தர், ஞானியர், ரிஷிகள், அவதாரங்கள், மதஸ்தாபகர்கள் – இவர்களின் போட்டோ அல்லது வரைபடங்களையோ, ஆசிரமங்கள் சமாதிகளின் படங்களையோ, தொட்டு உணர்வுதவ பலதரப்பட்ட இறை சக்திகளை அல்லது ஆவி இறையாற்றல்களை ( Spiritual - Physical Powers ) ஆரோகண முறையாக ஏறுபடிகளாக வரிசைக் கிரமப்படுத்தி (அதாவது படிப்படியாக அதிகரித்து வரும் ஆற்றல்களாக அமைத்து) பார்த்தால் அவற்றில் எல்லாம் மேலோங்கி விஞ்சுவது மேட்டுக்குப்பத்தில் சித்திவளாக மாளிகையில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் இறையருட் சக்தியாகும். அதுபோல், சுமார் 5000 வருடங்களுக்கு முன் வாழ்ந்த வேத காலத்து ரிஷிகள், குறிப்பாக ரிக்வேதத்தில் வரும் 465 ரிஷிகளின் பெயர்களை வரிசையாக எழுதித் தொட்டு, அவர்களின் மிகச் சிறப்பான இறை சக்திகளை உணர்ந்து வரிசைக் கிரமப்படுத்திப் பார்த்தாலும், இராமலிங்க வள்ளலாரின் திருப்பெயரின் அருட்சக்திக்கு இணையாகவில்லை. சித்திவளாக சக்தியே மேலோங்கி நிற்பதை அறியலாம்.

மேலும், ஒரே வகையான காந்தக் கற்களை மேற்சொன்ன பெயர்களின் மீதோ, படங்களின் மீதோ, புகைப் பிரசாதங்கள் மீதோ, தனித்தனியாக வைத்து வருத்தால் அவை ஒவ்வொன்றும் அவரவர்களின் இறை சக்திகளைத் தன்னியமாகக் கிரகித்து வைத்துக் கொண்டிருக்கின்றன. அவற்றை பலரும் தொட்டுணர்ந்து ஒப்பிட்டு அவரவர்களின் இறையாற்றல்களை வரிசைப்படுத்தலாம். அப்போதும் வள்ளல் பெருமானின் சக்தி (சித்தி வளாக சக்தி) மேலோங்கி அருள்புரிவதை உணரலாம். ஒரு புதுக்காந்தக் கல்லை கையில் தடவி தொடும்படி வைத்து குறிப்பிட்ட ஒரு தெய்வத்தையோ, தெய்வ நிலையையோ, மகானையோ, ஞானியையோ நினைத்து பெயர் சொல்லிக் கூப்பிட்டால் அவ்வாறு அழைக்கப்படுபவரின் இறை சக்தியை அக்கல் நேரடியாக ஈர்த்துக் கொள்ளும்.. இம்முறையால் வெகுகால தெய்வங்களின் இறையாற்றல்களை ஒப்பிட்டு முறைப்படுத்திக் கணிக்கலாம். அப்போதும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் சக்தி மேம்பட்டு விளங்குவதை அறியலாம். காலக்கருவின் சக்கரத்தில், முன் காலங்களை விட தற்காலத்தில் இறையருட்சக்தி அதிகரித்திருப்பதை அறியலாம். ஆகவே, வெகுகாலத்தில் அருட்பெருஞ்ஜோதி உடலின் வெளிப்பாடு அடையவில்லை என்றும், அல்லது அவ்வளவு சிறப்பாக வெளிப்பாடு அடையவில்லை என்றும், பிற்காலங்களில் சுமார் 2000 வருடங்களாகத்தான் சிறப்பாக வெளிப்பட ஆரம்பித்துள்ளது என்றும், வள்ளல் பெருமானின் அகத்திலும் அகப்புறத்திலும் புற உடலிலும் புறப்புற ஒளியிலும் அது முழுமையாக வெளிப்பாடு அடைந்துள்ளது என்றும், இதையறிந்தால் இந்நில உலக மக்களின் இகபர வாழ்வு மேலும் மேலும் சீராக அருள்மயமாக மலரும் என்றும் அறியலாம்.

இராமலிங்க வள்ளலாரின் இவ்வியாத அருட்சக்தியை மேலும் நிரூபிப்பது தமிழ் நாட்டு சிதம்பரமாகும். நியூயார்க் நகரில் ஒரு பகுதியிலுள்ள இக்கட்டிடத்தின் படத்தையோ, ஐ.நா. பொதுச்சபை நடக்கும்போது எடுத்த படத்தையோ தொட்டுணர்ந்தால் அச்சக்தி மேட்டுக்குப்பம் சித்திவளாக சக்தியாக இருப்பதை உணரலாம். உலகளவில் நடக்கும் பலதேச அல்லது சர்வதேச மகாநாடு அரங்குகளின் எல்லாம் – உதாரணமாக ஒலிம்பிக் விளையாட்டு, விஞ்ஞான அறிவியல், வர்த்தகம், விவசாயம், தொழில் நுட்ப வளர்ச்சி, கலைகள், கலாசாரம் முதலிய அரங்குகளில், ஏன் கூட்டு சேரா நாடுகளின் அரங்கிலும், ஒரே உலக அரசாட்சி விரும்பி முனையும் மகாநாடுகளிலும் வள்ளல் பெருமானின் சக்தியும் சாந்நித்தியமும் விளங்குவதை அப்படங்களைத் தொட்டு அறியலாம். மேட்டுக்குப்பத்தில் நிலவும் அதே சக்தியை உணருகிறோம்.

மற்றொரு சாட்சியும் நிரூபிக்கிறது. வள்ளலார் அறிவித்தபடியே, உலகத்தாரெல்லாம் மருவிக் கலந்து வாழ்வதற்கும், மக்கள் இனம் ஒருமையுற்ற இசைந்து வாழவும், வாழ்விக்கவும், சாதி சமய மத பேதங்களற்ற சமரச மக்கள் சமுதாயம் உருவாக்கவும், உலகெலாம் தக்கோ ஒருமையுற்ற ஒரே உலகாக ஏற்படுத்தவும் 1874 முதலாக தானே முன் நின்று உலக மக்களெல்லாம்

(மிகக் கொடிய உயிர்கள் போன்ற கொலை பாதகர்களைத் தவிர) அருட் சக்தியால் அரவணைத்துக் கொண்டிருக்கிறார் என்பதும் ஆதாரபூர்வமான உண்மையாகும். பெருமான் "நான் இந்த உடம்பில் இருக்கிறேன் இனி எல்லா உடம்பிலும் புகுந்து கொள்வேன்" என 1874 ஜனவரி மாதக் கடைசியில் அறிவித்தபடி நிறைவேற்றியுள்ளார், நிறைவேற்றி வருகிறார். 1874 ஜனவரிக்குப்பின் அக்காலத்தில் உலகத்தின் எந்தப் பகுதியிலும் வாழ்ந்த மக்களின் போட்டோ படங்களில் - விஞ்ஞானிகள், அரசர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், அறிவு மேதைகள், ஞானிகள் மற்றும் பாமரமக்கள், பெண்டிர், பிறந்த குழந்தைகள், நாகரீகமற்ற மலைவாழ் ஆதிவாசிகள், காடுகளில் பழங்குடி மக்கள் - இவர்களின் போட்டோ படங்களில் எல்லாம் அவரவர்களது உடலின் சுற்றுப்புறச் சூழல் மட்டும் (Environmental Body of a Person) தொட்டுப் பார்த்தால் சித்திரப் படத்தின் சக்திக்கு ஒப்ப இருப்பதை உணரலாம்.

இராமகிருஷ்ணர், ரமணர், அரவிந்தர் போன்ற ஞானியர் படங்களில் அதன் மேல் முனையில் ( Top Corners ) இச்சக்தியைத் தொட்டு உணரலாம். 1874க்கு முன் பிறந்த மக்களின் போட்டோக்களில் இவ்வாறு உணர முடியாது. அவை ஒரு சக்தியையும் உணர்த்தாது. 1874 முதல் இன்றும் நடந்து வரும் அற்புத அருட் செயலாகும். சாதி, சமயம், மதம், மொழி, இனம், நாடு, கலாச்சாரம், பால், வயது - ஆகிய வித்தியாசங்களைப் பாராட்டாது உலக மக்கள் அனைவரின் புற உடம்பின் சூழலை பெருமானின் ஒரு சக்தி அணைத்துக் கொண்டிருக்கிறது. நீங்களும் உங்கள் போட்டோவில், முதலில் ஒரு சக்தியையும் உணர்த்தாத உங்களது அங்கமான உடலைச் சிறிது நேரம் - அதாவது 3-5 நிமிடம் தொட்டபின், உடலின் சூழலைத் தொட்டால் அதன் உரிய சக்தியை, வள்ளலாரின் சக்தியை உணர்வீர்கள். மாறி மாறித் தொட்டுப் பார்த்தால் அவசியம் அறிவீர்கள்.

ஐக்கிய நாட்டு பொதுச் சபையும் ( U N O ), யுனெஸ்கோ ( U N E SCO)போன்ற ஐ.நா. இணை நிறுவனங்களும் சிறப்பாக சக்தியையே உணரலாம். பெருமானின் சீடர்கள் பலரின் உடலிலும், நாம் விரும்பிப் புகுந்து கொள்ளும் அன்பர்களின் உடலிலும் (உதாரணமாக, ஐ.நா. பொதுக் காரியதரிசி), மக்கள் பெருமான் தம் மேலான உடல் சக்தியை அவர்களின் அங்கமான உடலில் இயக்கச் செய்துள்ளார். அவர்கள் தம் சுற்றுப்புறச் சூழல் உலகெங்கும் பரவியதாக அச்சக்தி அவர்கள் உடலிலே இருப்பதைத் தொட்டு அறியலாம். உள்நாட்டுச் சண்டைப் போர்களில், நாடுகளில் (உதாரணமாக லிபியா, [illegible], ஈராக் முதலியன) இங்கும் மேலான சக்திவாய்ந்த சக்தியை உணரலாம். பெருமானின் கருணைப் பேரன்பின் அருளாற்றலை உணர்த்தி எல்லோரையும் ஒன்றைப் பற்றி அருகிட விளையாட்டுப் புரிகிறது.

இவ்வாறு உலகமக்களின் உடல்களையெல்லாம் முதலில் சுற்றுப்புறச் சூழல் அரவணைத்து, பின்பு புகுந்து கொண்டே பெருமான் தம் தெய்வீக ஒளி உடலை கரந்து ஒப்படைத்துத் தன்னை 1874ல் அர்ப்பணஞ்செய்து பெருந் தியாக வேள்வி இயற்றி உலகளாவிய பெரும் அருட் சித்தியைப் புரிந்திருக்கிறார்.

...6/-

வரலாறு காணாத சித்தர் அவர். அவரது சித்தி நிலையை இப்படம் உணர்த்தும்.

மேலும் காண்போம். உலகில் பெயர்பெற்ற பிளேட்டோ, சாக்ரடீஸ், சீனாவின் கன்ஃபூசியஸ், பாரதத்தின் ஞான நீதியை, தெருவத்தின் வாமனர், நம் நாட்டின் வேதகால ரிஷிகள், பிற்கால யோகியர், ஞானியர், சித்தர்கள் மற்றும் ராமர், கிருஷ்ணர் அவதாரங்கள், ஏசுப் பெருமான், புத்தர் தெய்வ நிலைகள் - சச்சிதானந்த நிலையும் பரம்பொருளும் - இறைநிலை அல்லது இவர்களில், எண்ணற்றோரமாக அந்நிலையும் தாயை இறை ஆற்றலை, அவர்களது காந்தக் கதிர்கள் வாயிலும் (ஒளிபாக தியானம் பயிற்சியுடையவர்) தொட்டுணர்ந்து காந்தக் கல் போட்டோ படங்கள் ஒன்று இங்கு வெளியிட்டுள்ளோம். அவர்கள் எல்லோரையும் மகான்கள் என்ற பொதுவாக அழைப்போம்.

முதல் படத்தில் (I) ஆரம்பத்தில் சாதாரண காந்தக் கதிர்கள் இரண்டு O. M. என குறிக்கப்பட்டுள்ளன. ஒன்று South Pole - S குறிப்பிட்ட தென் துருவப் பக்கத்தையும், மற்றது North Pole - N குறிப்பிட்ட வடதுருவப் பக்கத்தையும் காட்டுகிறது. இவ்வாறே ஒவ்வொரு மனிதருக்கும் இரு காந்தக் கதிர்கள் தனித் தனியாகத் தொட்டால் பெரும்பாலோரின் தென் (S) துருவ ஆற்றல் வட (N) துருவத்தை விட சற்று அதிகமாயிருக்கும். முன்னது (S) உயிருக்கு ஆன்மா சம்பந்தப்பட்டது. பின்னது (N) நேர் உடல் சம்பந்தப்பட்ட தாய, இறையாற்றலை உணர்த்தும். இவ்வாறு சம ஆற்றல் (S = N) கிடைக்கும்தான் அமைந்துள்ளது. S = N என குறிக்கப்பட்ட இவர்கள், சித்தர்கள், மகான்களில் சிறப்பானவர். மேல் வருந்தார் மேல் சித்தருக்கும் S = N என அமைந்திருப்பது சிறப்பாகும். இவ்வாறான தாய இறை சக்தியை (Spiritual - Physical Power) உயர ஓங்கச் செய்ய நம் இரு கைவிரல் நுனிகளால் ஆதாரமாக தென் துருவம் மீது இடது கை கட்டு விரலையும், வடதுருவம் மீது வலக்கை கட்டு விரலையும், - 3 - 5 நிமிடம் வைத்து அதிகமேலும். தியான உணர்வு அல்லது அதன் ஆற்றல் நமக்குத் தெரியவரும். எண்ணற்ற சிரமமாக மகான்களின் கதிர்களை இவ்வாறு தொட்டு வந்தால் தியானம் அல்லது நம் உணர்வின் ஆற்றல் மேலும் மேலும் கூடும் அல்லது உயர்வான ஆற்றல் செய்த மனநிறைவு கொடுக்கும்.

இதுபோன்ற பல மகான்களின் ஆற்றல்கள் ஒரே பட்டத்தில் அமைந்திருப்பதையும் கண்டு கொள்வீர்கள். பொதுவாக, உடல் சித்தி கூறாத மகான்களின் தாய இறை சக்தி ஒன்றாக இருக்கும். எல்லா மகான்களும் ஒரே பேராற்றலின் அம்சங்கள். எல்லோரையும் நாம் போற்றி வணங்குகிறோம். மேலும் நம் அத்தகைய உடலை, அதன் புற இயல் சக்கரங்களை ( Chakras ) அழகும் சக்தியின் அவர்களின் காந்தக் கதிர்கள் விழிப்படைகின்றன. ஆரோக்கிய முறையில் மற்றோசிரியரை முதல் படியாகக் கொண்டு ஆரம்பித்த மற்றவர்களின் ஆற்றல்களை படிப்படியாக அமைந்து, இவ்வாறு வரிசைப்படுத்தித் தொட்டு நம் யோகத்திற்குப் பயன்படுத்தலாம்.

இரண்டாம் படம் (II) திருமூலர் கதிர் ( T M ) வைத்து ஆரம்பிக்கிறது. இப்படத்தில் வேதகால ரிஷிமுனிவர்கள். வேதகால ரிஷி ஒருவருக்கு அடுத்த பிற்கால யோகியர் அல்லது சித்தர் ஒருவரின் கதிர் ஒரே சுற்று வட்டத்தில் ஒப்பிட்டுப் பார்க்க அமைத்திருக்கிறோம். பின்னரின் (வடமொழி N ) உடல் சுற்று முன்னோடி N விட சுற்று அதிகமாக உள்ளதை உணரலாம். வேதகாலங்களில் வெளிப்படாமல் பிற்காலங்களில் அருட் பெருஞ்சோதி வெளிப்பாடு அடைந்திருப்பதே இதற்குக் காரணமாகும். நடுவில் அர்த்தநாரீஸ்வரர் ( AN ) கதிரும், அரவிந்த ஆசிரமத்து அன்னையின் உடலில் அனாவசியமாகக் கண்ட போல் அதன் ஒப்புமையான சூப்பர் மென் காண்சியஸ்னஸ் ( S.C) என்னும் இறைசக்தியின் கதிரும் உள்ளன. அர்த்தநாரீஸ்வரர் சமநிலையுள்ள கொடுத்த ஐம்பொறி இறை சுற்றல்களையும் சமமாகப் பெற்றிருக்கின்றனர் உணர்த்தும். இதே போன்று இடையும் அதிகரித்த சமநிலைச் சக்தியை வெளிப்படுத்துவதை முடிவில் உள்ள பரம் பொருளின் (ABT, Absolute Truth ) கதிர். இதற்கு அடுத்ததை சச்சிதானந்தக் கதிர் (SAT) குறிக்கிட்டவை. வள்ளல் பெருமானின் இறையை உடல் சக்தி ( SR ) . அவரது ஒளி நாட்டுச் சபையில் விளங்கும் சக்தி ( UNO ), எல்லா மக்களின் புறக்குறையில் உள்ள அவரது சக்தி (EBP). பெருமானின் படத்தில் அவர் உடலில் புறக்குறையில் வெளிப்பட்டுக் காணும் சச்சிதானந்த சக்தியின் சாந்தக் கதிர் படத்தில் SR ( SAT ) என்று குறிப்பிடப்பட்டுள்ளன. ஆக அவரது நான்கை சக்தியின் கதிர்களை ஒருசேர ஒன்றாம் படத்தில் காண்பீர்கள்.

முதல் காந்தங்கள் படத்தில் (I) வரும் மகான்களின் வரிசை பின்வருமாறு : ஆரம்பத்தில் CH சாதாரண காந்தங்கள். பின்பு மகீசர், இராமானுஜர், யோகானந்த பரமஹம்சர் (அமெரிக்கா), வைதிக மடாசம் (காசி), ஆதிசங்கரர், ரமண மகரிஷி, முகம்மது நபி, புத்தர், ஸ்ரீ ராமர், சீராடேஷ், இயேசுகிறிஸ்து, இராம கிருஷ்ணர், ராம்தாஸ் (காஞ்சன்காடு மங்களூர்), ஸ்ரீ கிருஷ்ணர், மாணிக்கவாசகர், அரவிந்த ஆசிரமத்து அன்னை, ஸ்ரீ அரவிந்தர், போகர், மதுரை மீனாட்சி, காஞ்சி காமாட்சி, பசவண்ணா (கர்நாடகம்), ஜலாலுத்தீன் ரூமி (பாரசீகம்), பிளேட்டோ (கிரீஸ்), அருணகிரிநாதர், குதம்பைச் சித்தர், திருநாவுக்கரசர், குமாரதேவர் (விருத்தாசலம்), இடைக்கண் நாயனார், அவ்வையார் ஆகியோர்.

இரண்டாவது காந்தங்கள் படத்தில் (II) வரும் மகான்கள், வேதகால ரிஷிகள் பின்வருமாறு: ஆரம்பத்தில் திருமூலர் சித்தர், பின்பு சீரடி சாயிபாபா, திருமங்கைத் தேவர், கடுவெளிச்சித்தர், சாந்த ராம்தாஸ் (மகாராஷ்டிரம்), வேதவியாசர், ரிஷி காசிபர் விஸ்வாமித்திரர், கோரக்நாத் (மகாராஷ்டிரம்), ரிஷி வசிஷ்டர் மஹரிஷி, சூப்பர்மென் காண்சியஸ்னஸ் ( Superman Consciousness as experienced in 1969 by the Mother of Sri.Aurobindo Ashram ), ரிஷி ராமானந்த கௌதமர், மெய்கண்டதார் தேவசித்தர், ரிஷி ஆத்ரேய சதாசிவனர், அல்லம பிரபு (கர்நாடகம்), மெய் ரிஷி ஆங்கீரச வசிஷ்டர்,

சிதம்பர சுவாமி (திருப்போரூர் சித்தர்), குர்க்கநாரியவர் (சமரசம்
பழந்தம் தெய்வநிலை), சேஷி ஆயாஸ்யர், அடிநாள பாலைய தேசிகர்
(பொம்மையார் பாளையம், பாண்டிச்சேரி), கம்புபடியன் (சீ.), சாக்ரகம்
ஜ்ஞானி), சேஷி காத்ரே விஸ்வாமித்ரயுபா, மவுன அடிநாள பாலசித்தர்
(பொம்மையார் பாளையம், பாண்டிச்சேரி), ஞானம் அரசர் (ஜெருசலம்),
பின்பு வள்ளல் பெருமான் இராமலிங்கரது ஒரு இறைசக்தி - உலக மக்கள்
உடல் சக்திப்புறச் சூழல் சுற்றதன்படி (EBP : "Environment Body Power");
இராமலிங்கரது இறைமை உடல்சக்தி (SR: Swami Ramalingam - 28வது.
இராமலிங்கரது மற்றொரு சக்தி - ஐக்கியநாட்டுச் சபையின் சக்தி ( U N O );
அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் நிலை ( APJA - 36வது! சச்சிதானந்தம்
41-45ம் வேலை, பரம்பொருள் (ABT) ஆகியோர். (அருட்பெருஞ்ஜோதி
ஆண்டவருக்கும், சச்சிதானந்தத்திற்கும் இடையே உள்ள அருவமான ஆகட நதிந்த
உலகு 37வது, சித்த உலகு 38வது, சுத்த உலகு 39வது, ஆதி உலகு 40வது-
இவை படத்தில் குறிக்கப்படவில்லை.)

இறுதியில் A B T கற்களைத் தொட்டபின் மற்ற எல்லா கற்களையும் தொட்டால் அவை சமநிலை ஆற்றலை உணர்த்தும். சமநிலை உணர்வு மறையச் சில நேரம் பிடிக்கும்.

மூன்றாவது காந்தக்கல் படத்தில் III வள்ளல் பெருமான் வெளிப்படுத்தும் நான்கு வகை இறைசக்திகளின் காந்தக்கற்கள் (EBP, UNC, SR, "SR SAT) என்பவை. பரம்பொருளின் சமநிலைச் சக்தி மறைந்து நிற்கசெயல்படுகிறது. மேலே சொல்லிய சோதனைப்படி, சூரக்கப்பற விதைகளின் மூலம் இதை அறிகிறோம். மேலும், முதல் மூன்றில் கற்களின் நடு மையத்தில் சச்சிதானந்த சக்தியும், நான்காவதில் கற்களில் சமநிலை கொடுக்கும் பரம்பொருளும், மறைந்த விண்ணுலக வடிவமையால் நடுமையத்தில் தொட்டு அறியலாம்.

மேலே சொன்ன காந்தக்கற்களின் மூன்று படங்களை ஒன்றோன்றாக, ஒட்டு மொத்தமாக இருகைகளையும் வைத்துத் தொட்டால், எல்லா உலக மகான்களையும் தொட்ட மனத்திருப்தியும் மகிழ்ச்சியுமடையலாம். நேரம் கிடைக்காதபோது, இவ்வாறு செய்தும் இறைசக்தியைப் புராணமாகப் பெறலாம். அருளையடையலாம். மேட்டுக்குப்பத்திற்கு அருகிலுள்ள தொழில் வளரும் நகரம் நெய்வேலியாகும். ஒட்டுமொத்தமாக நெய்வேலி நகரம் முழுவதையும் பெருமான் ஆட்கொண்டுள்ளார். ஆகவே அதன் பஞ்சபூதங்களும் நகரவாசிகளும் அருளாட்சிக்கு ஆட்பட்டுள்ளனர். நெய் வேலி படத்தைத் தொட்டு அறியலாம். அதன் வானம், நீர்நிலைகள், மண், நிலக்கரிச் சுரங்கங்கள், படத்தில் காணும் ஜனங்கள் எல்லோரையும் தொட்டுப்பார்த்தால் சித்தியாக சக்தியை உணரலாம். அதன் நிலக்கரியும் அங்கு தயாராகும் மின்சாரமும் அதே சக்தியைப் புலப்படுத்தும். ஆம், நிலக்கரி (லிக்னை)யின் அனல் ஒளி, அதன் சாம்பலும் சச்சிதானந்த சக்தியை வெளிப்படுத்துகின்றன.

இப்போது ஜெருசலம் நகரம் முழுவதும் போல அரசர் சாலைக் குழு இறை சக்தியின் ஆட்சிக்குட்பட்டுள்ளது. இப்போது சக்தியால் நம் நாட்டிலும் தில்லி, பம்பாய், மதுரை முதலிய நகரங்கள் புராணும் அதனைப் போல் ஓரளவாக ஆட்கொள்ளப்பட்டுள்ளன. இவை வேதகால நகரங்களை விட, கங்கை போன்ற நதிகளைவிட நால இறையாற்றல் மிக்கவை. என்றும், நெய்வேலியின் இறைசக்தி பரிமாணம் மிகவும் மேலோங்கியவாக உள்ளது.

டெல்லியிலும், ஐக்கிய நாட்டுச் சபையிலும், அதன் மூலம் உலகம் அதே அருட்சக்தி, புதுச்சேரிக்கு அருகில் புதிதாக உருவாகி வரும் "ஆரோவில்" என்னும் உலக மாநகரத்திலும், அதன் பஞ்ச பூதங்களிலும் நிறைந்து விளங்குகிறது. அரவிந்த ஆசிரமத்து அன்னை இப்புது நகரை உருவாக்கினார். அவரது உடலில் இதே அருட்சக்தி 1964ல் வந்து விகாசம் செயல்பட்டது. இதன் வல்லமையாலும், அன்னையும், அரவிந்தரும் உலக மக்களை நல்லறவியாகவும், கட்டாகவும், மனுஷி-ரான உள்ளம் உடல் இயக்கமும் இயக்கத்தையும் தெய்வீகத்தராக மாற்றும் இறை பணியில் ஆத்ம நேய பரம்பர ஒத்துழைப்புடன் செயல்படுகிறது என்பது கண்கூடு.

தெய்வீக விஞ்ஞான ஒளி (Supramental Light) என்னும் அருட்சோதியை வெளிப்படையாக நிலைக்கும்படி உலகுக்குக் கொண்டு வருவதில் அன்னையும், அரவிந்தரும் நமக்கு இருந்து 1956ல் ஜுன் வெற்றியும் கண்டனர். இதனால் உலக மக்கள் ஆத்ம நேயத்துடன் கூடிய கட்டுப் பரிணாம வளர்ச்சியின் படிப்படியாக தெய்வீகத் தராக (Divine Evolution of the Mankind) மாறி அமைவார்கள் என்பது நிச்சயம்.

"அருட்பெருஞ்ஜோதி" என்றது சித்திமாக சக்தியாகவும், அதை மறைந்து நிற்ற அருளும் சச்சிதானந்த சக்தி "தனிப்பெருங்கருணையாகவும்" உள்ளன. இவ்விரு நிலைச் சக்திகளையும் ஒருசேர இராமலிங்க பெருமானின் அருளை வெளிப்படுத்துவது பெருமானின் படமாகும். இதை அவரது உடலை, முகனை, கண்களைப் பார்த்து உணர்வீர்களாக. அந்நிலையில் நம் உள்ளமும் உடலும் அருட்சக்தியைக் கிரகித்துக் கொள்ளும்.

மேலும், மேற்சொன்னவாறு படம் கொண்டால் அச்சக்தி நம்முடன் தங்கி விடுவது நிச்சயம். இதனால் மன அமைதியும் இதய நெகிழ்வும் தியான உணர்வும் மேலோங்குவது உண்டு. மேலும், வீட்டுக் கூரை மேல் கட்டும் இரு வரிசை தொடும்படி இப்படத்தைச் சொருகி வைத்தால் வீடு பூராவும் அதன் பஞ்சபூதங்களும் மின் விளக்குகளும் அருள்மயமாகிவிடும். அந்த வீட்டு மின் விளக்குடன் ஒப்பிட்டுப் பார்த்து அறியலாம். அருள் சொன்னால் பெருமானின் படம் சித்திமாக சக்தியைப் பிரதிபலிப்பது மட்டுமல்லாமல், சச்சிதானந்த சக்தியை வெளிப்படையாகவே த் உணர்த்துகிறது. ஒரு, அடு, உருவு சக்திகளை-யும், உலகத்தில் அருள் சக்தியையும், அவைச்சுழலில் உருச் சக்தியையும் அறியலாம்.

உடல் ( அ = மூலாதாரம், சுட்டுவிரல்)
ஆத்ம உள்ளம் ( உ = இதயம், மோதிரவிரல்)
பிராணன் ( ம = நாபி, நடுவிரல் )
ஆத்ம மனம் ( இ = நெற்றி - நடுவுச்சி, பெருவிரல் )
ஞானத்தில் இருந்து இணைக்கும் அருட்சக்தி ( ய = கண்டம், சிறுவிரல் ). உள்ளும் புறமும், மேலும் கீழும், முழுமையும் இரண்டற இணைந்த அருள் வளர்ப்பது அருட்பெருஞ்ஜோதி மந்திரம்.

" அ - உ - ம - இ - ய - அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி "

*****